பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 11 செவ்வாய்க்கிழமை 29.11.2022 கதிர் 276

## காலிமுகத்திடலில் ஆணின் சடலம் மீட்பு

கொழும்பு – காலிமுகத்திடல் மைதானத்தில் உள்ள கொடிக் கம்பத்துக்கு அருகிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் இன்று மீட்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கிராண்ட்பாஸைச் சேர்ந்த 45 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக 2

# ஜனநாயகத்தைத் தகர்த்து ஆளுநர் அரசமைப்பு மீறல்





### அவைத் தலைவர் சீ.வி.கே. குற்றச்சாட்டு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் முறையீடு

யாழ்ப்பாணம்,நவம்பர்29

“மற்றவர்களுக்குத் தெரியாமல் இரகசியமான முறையில் ஆளுநர் மேற்கொண்ட இந்த நடவடிக்கை (மாகாண நியதிச் சட்டவாக்கம்) ஜனநாயகத்தினதும், ஜனநாயக ஆட்சி முறையினதும், ஜனநாயகக் கட்டமைப்புகளினதும், மக்களின் ஜனநாயக உரிமைகளினதும் அடிப்படை அத்திவாரத்தையே தகர்ப்பதாகும். அத்தோடு வடக்கு மாகாண ஆளுநர் இந்த விடயத்தில் திட்டமிட்டே இந்த நாட்டின் அரசமைப்பை மீறியுள்ளார் என்பது தெளிவு” 8

### ஆழ்கடலில் இரு மாதங்கள் தவித்த

## இலங்கை மீனவர்கள் 4 பேர் இந்தியக் கடற்படையால் மீட்பு



(ந.லோகதயாளன்)

நடுக்கடலில் தத்தளித்த 4 இலங்கை மீனவர்களை இந்தியக் கடற்படையினர் மீட்டு சென்னை துறைமுகத்துக்கு 2

## யாழ். பல்கலை மாணவர் மன்றத்தின் பிரதிநிதிகள் இருவரும் விடுதலை!

### மூன்று வருட வழக்கு முடிவுக்கு வந்தது

யாழ் பல்கலைக்கழக மாணவர் மன்ற அறையில் 2019 ஆம் ஆண்டு மே மாதம் மூன்றாம் திகதி நடந்த தேடுதலை அடுத்து அங்கு புலிகளின் தலைவரின் படம் மற்றும் பதாகைகள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அப்போதைய தலைவர் எம்.திவாகரன் மற்றும் செயலாளர் எஸ். பபில்ராஜ் ஆகியோருக்கு எதிரான பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்குகளை கொழும்பு மேல் நீதிமன்றங்கள் இன்று விலக்கிக் கொள்ள அனுமதி அளித்தமையுடன், 8



## வடக்கில் இ.போ.ச. சேவை இன்று முழுவதும் முடக்கம்

### பயணிகள் பெரும் அவதி



தமது சக ஊழியர் தாக்கப்பட்டமைக்கு நீதி கோரியும், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் இலங்கைப்போக்குவரத்துச்சபையின் யாழ். சாலையினரால் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் 2

### இலங்கைக்குக் கடத்த முயன்ற

## 40 மஞ்சள் மூடைகள் தமிழகத்தில் சிக்கின




(ந.லோகதயாளன்)

இலங்கைக்குக் கடத்த இருந்த 1500 கிலோகிராம் நிறையுடைய 40 மஞ்சள் மூடை களைத் தமிழகப் 2

## கடும் கவலையில் கோட்டா

### ஒத்தடம் கொடுக்கும் பிரசன்ன



அரசியல் பக்கம் மீளத் தலைகாட்ட மாட்டாரராம்! – பிரசன்ன கூறுகின்றார்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இப்போது கடும் கவலையில் உள்ளார். அவர் அரசியலுக்கு 2

## முன் நிபந்தனைகள் விதிக்காதீர்கள்; முதலில் பேச்சு மேடைக்கு வாருங்கள்

### தமிழ்க் கட்சிகளிடம் ரணில் வேண்டுகோள்



தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்பமா வற்கு முன்னரே நிபந்தனைகளை தமிழர் தரப்பு விதிக்கக் கூடாது. முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசியல் தரப்புக்களிடம் 2

## வீதிகளைப் புனரமைக்குமாறு கோரி இரண்டு கவனயீர்ப்புப் போராட்டங்கள்



வலிகாமம் மேற்கில் உள்ள வீதிகளைத் தற்காலிகமாகவேனும் புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்து இன்று சங்கானையிலும் மூளாயிலும் கவனயீர்ப்புப் 2

## தமிழரை அடக்கிக்கொண்டு தீர்வைக் காணவே முடியாது

### ஆட்சியாளர்களிடம் ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டு

தமிழர்களைப் புண்படுத்திக் கொண்டு அவர்களது பிரச்சினைகளுக்கு ஆட்சியாளர்களால் தீர்வு எதையும் காண முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இறுதி யுத்தம் 2009 8



## ஊசி மூலம் ஹெரோய்ன்: 15 வயது மாணவன் சாவு

யாழ்ப்பாணத்தில் ஊசிமூலம் உயிர்கொல்லி ஹெரோய்ன் பயன்படுத்திய 15 வயது பாடசாலை மாணவன் ஒருவர் மூளை மற்றும் இதயத்தில் கிருமித்தொற்று ஏற்பட்டு உயிரிழந்துள்ளார். 2



## முன் நிபந்தனை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை விடுத்துள்ளார். பட்ஜட் விவாதம் முடிவடைந்த பின்னர் இனப் பிரச்சினை தீர்வு தொடர்பில் சர்வகட்சி கூட்டம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் ஆராய்ந்த தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் மூன்று நிபந்தனைகளை விதித்திருந்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பேச்சு ஆரம்பிக்க முன்னரே நிபந்தனைகளை முன்வைக்காதீர்கள். முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள். பேச்சு மேசையில் பேசி, தீர்வு தொடர்பில் முடிவு எடுப்போம்.

என்ன பிரச்சினை என்றாலும் பேச்சு மூலம்தான் நல்ல தீர்வு கிடைக்கும்.

கிடைத்த நல்ல சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தத் தமிழ்த் தலைவர்கள் முன்வர வேண்டும். கடந்த காலத் தவறுகளை மீண்டும் இழைக்காதீர்கள் - என்றார்.

## காலிமுகத்திடலில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் சில காலமாக நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை பெற்று வந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த குறித்த நபர் கடந்த 27 ஆம் திகதி வீடு திரும்பியிருந்த நிலையில் நேற்று (28) காலை வீட்டிலிருந்து வெளியேறியிருந்தார் என்றும் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் உறவினர்களால் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊசி மூலம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவருடன் சேர்த்து இந்த ஆண்டு 13 பேர் உயிர்கொல்லி ஹெரோய்ன் பாவனையாளர்கள் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியொன்றில் வசிக்கும் 15 வயது மாணவன் கடும் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்தவாரம் சேர்க்கப்பட்டுள்ளார். அவசர சிகிச்சைப் பிரிவில் வைத்து சிகிச்சையளிக்கப்பட்டபோதும் நேற்று அந்த மாணவன் உயிரிழந்துள்ளார்.

மாணவனின் சடலத்தை நீதிவான் நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டார்.

உயிர்கொல்லி ஹெரோய்னை ஊசிமூலம் இந்த மாணவன் பயன்படுத்தி வருகின்றமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## வடக்கில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வடக்கு மாகாணத்திலுள்ள 7 சாலைகளின் ஊழியர்களும் இன்று பணிப்புறக் கணிப்பில் ஈடுபடுகின்றனர்.

இதனால் வடக்கு மாகாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் எந்தவொரு சேவைகளும் இன்று இடம்பெறவில்லை. பயணிகள் பெரும் அவதியை எதிர்நோக்கியுள்ளனர்.

## கடும் கவலை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரும் நிலைப்பாட்டில் இல்லை. -இவ்வாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

'கோட்டாபய மீண்டும் அரசியலுக்கு வருவாரா?' என்ற கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவரின் பதிலின் முழு விபரம் வருமாறு:-

கோட்டாபய இப்போது கடும் கவலையில் உள்ளார். அவர் நல்லவர். அவர் ஜனாதிபதியாகி குறுகிய காலத்துக்குள் நாட்டுக்கு நல்லது செய்ய முற்பட்டார்.

நஞ்சற்ற உணவுகளை வழங்குவதற்கு அவர் முயற்சித்த போது மக்கள் அதை விரும்பவில்லை. உள்ளூர் உற்பத்தியைக் கட்டியெழுப்புவதற்கும் அவர் முயற்சி செய்தார். அதுவும் முடியவில்லை. ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு 69 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. அந்த 69 இலட்சம் பேரும் அவரை எதிர்க்கவில்லை.

கிராம மட்டத்தில் இன்னும் மக்கள் அவரை நேசிக்கின்றார்கள். அங்கு சென்றால் தெரியும். கோட்டாபய பாவம் என்று அவர்கள் சொல்கின்றார்கள்.

கோட்டாபய ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கு முதலில் விரும்பவில்லை. என்னால் செய்ய முடியாது. மஹிந்த அண்ணாவிடம் கூறுங்கள் என்று என்னிடம் கூறினார்.

நாட்டு மக்கள் உங்களையே விரும்புகிறார்கள் என்று கூறி அவரை இணங்க வைத்தோம். அது சரியாகவே அமைந்தது. 69 இலட்சம் மக்கள் அவரை ஆதரித்தனர்.

அவர் அரசியலுக்கு வரும் நிலைப்பாட்டில் இல்லை. நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்றால் அரசியலுக்கு வராமல் செய்ய வேண்டும் என்பதுதான் அவரது தற்போதைய நிலைப்பாடு. அது பின்னர் மாறுபடுமா என்று சொல்ல முடியாது - என்றார்.

## வீதிகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

வலிகாமம் மேற்கு பிரதேசத்தின் ஊடாகச் செல்லும் பெருந்தெருக்களே இதுவரை புனரமைக்கப்படாமல் உள்ளன. யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி, மாவடி - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை - பொன்னாலை வீதி என்பன மோசமாகச் சேதமடைந்துள்ளன.

இந்த வீதிகளூடாக மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வீதிகளை நிரந்தரமாகப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், மழை காலத்துக்கு முன்னர் தற்காலிகமாவேனும் புனரமைப்புச் செய்யுமாறு கோரியும் இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றன.

சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாகவும் மூளாய் அரசடிச் சந்தியிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

## 40 மஞ்சள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். அத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மண்டபம் அடுத்துள்ள வேதாளை கடற்கரையில் இருந்து இன்று அதிகாலை இலங்கைக்குச் சட்டவிரோதமாக படகு மூலம் கடத்த இருந்த சுமார் 1500 கிலோகிராம் நிறையுடைய 40 மஞ்சள் மூடைகள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்திய நாட்டுப் படகு, மஞ்சளைக் கடல் கரைக்கு ஏற்றி வந்த வாகனம் உள்ளிட்டவைகள் தனிப் பிரிவுப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்து மண்டபம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எது முன்ன நிபந்தனை?

அனுபவங்களில் இருந்து – பட்டறிவிலிருந்து –கற்றுத் தேறாதவன் முட்டாள். காலங்காலமாக நாம் கற்றுக் கொண்ட பாடம் அதுவே. 'குட்டக் குட்ட குனிபவ னும் குனியக் குனியக் குட்டுபவனும் கூட முட்டாள்தான்'.

அப்படித்தான் தமிழர்களை முட்டாள்களாக நினைத்துக் கையாண்டு வருகிறது இந்த நாட்டின் பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாதிக்கம். அதுதான் கடந்த ஏழரை தசாப்த கால வரலாற்றுப் பாடம்.

பேரினவாதத்தின் அந்தப் பரவணிப் பண்பியல்புகளில் இருந்து தாமும் சற்றும் வேறுபட்டவர் அல்லர் என்பதை இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நிரூபித்து வருகிறார் போலும்.

"தேசிய இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சு ஆரம்பமாவதற்கு முன்னர் நிபந்தனைகளைத் தமிழர் தரப்பு விதிக்கக் கூடாது. முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள்!" – என்று தத்துவம் பேசியிருக்கின்றார் அவர்.

தமிழர்களைப் பொறுத்தவரை இது, புளித்துப்போன – பயனற்ற – உபதேசம். ஒரு சதத்துக்கு உதவாத வியாக் கியானம்.

நல்லாட்சி அரசில், இதே ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து ஒரு ஜனாதிபதியையும், ஓர் அரசையும் உருவாக்குவதற்கு உதவி, எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வைத்துக்கொண்டு அரசுக் கட்சியினராகச் செயற்பட்டு, இதே ரணில் விக்கிரமசிங்கவுடன் சுமார் 90 வழிகாட்டல் கூட்டங்களுக்கு – பேச்சு மேசைகளுக்கு – நிபந்தனைகள் ஏதும் விதிக்காமல்தான் தமிழர் தரப்பு அலைந்தது. கடைசியில் என்னவாயிற்று? மூன்றரை வருடங்கள் இழுத்தடித்த பின்னர், உருவான நகல் அரசமைப்பு யாப்பு வடிவம் கூடத் தன்னுடைய தயாரிப்பு இல்லை என்று கூறி, உதறித் தள்ளிவிட்டு ஓடியவர்தான் இதே ரணில் விக்கிரமசிங்க. அவர்தான் மீண்டும் நிபந்தனயற்ற பேச்சுக் குறித்துத் தத்துவம் பேசுகின்றார்.

இதற்கு முன்னர் எத்தனை பேச்சு மேசைகளை – சமாதான முயற்சிகளை – நிபந்தனையின்றித் தமிழர் தரப்புக் கண்டாயிற்று? முடிவில் என்னவாயிற்று?

இப்போதும் கூட, தமிழ்க் கட்சிகள் எல்லாம் சேர்ந்து முன் வைத்திருக்கும் மூன்று அம்ச விடயங்களும் கூட முன் நிபந்தனைகள் அல்ல. அதனை அக்கட்சிகளே முதலில் தெளிவு படுத்தி விட்டன.


அந்த மூன்று அம்சங்களில் முதல் இரண்டும் – நில அபகரிப்பை நிறுத்துவதும், மாகாண சபைத் தேர்தல் உட்பட அரசமைப்பின் 13ஆம் திருத்தத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்துவதும் – தமிழ் மக்களின் பற்றி எரியும் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டவை.

மூன்றாவது – பேச்சின் மூலம் தாங்கள் அடைய எதிர் பார்ப்பது, தங்களது அபிலாசை – வேணவா – விருப்பு –இலக்கு – யாது என்பதைத் தமிழர் தரப்பு பேச்சுக்கான தமது விளக்க நிலைப்பாடாகவும் தெளிவுபடுத்தலாகவும் முன்வைத்தது. அது குறித்துப் பேச்சு மேசையில் பேசி முடிவெடுப்போம் என்ற தமிழர் தரப்பின் நிலைப்பாடு பேச்சுக்கான முன் நிபந்தனை அல்ல.

தமிழரின் பற்றி எரியும் உடனடிப் பிரச்சினை சம்பந்த மான முதல் இரண்டுக்கும் தீர்வு தர லாயக்கு இல்லாத அரசுத் தலைமை, அதை முன் நிபந்தனையாகக் கருதி, உதாசீனம் செய்யுமானால், அந்தத் தலைமையுடன் பேசிப் பயனில்லை என்பதே தெளிவு. 'கூரை ஏறிக் கோழிபிடிக்க முடியாத தரப்புடன், வானம்ஏறி வைகுண்டம் போகும் கதையாகத்தான்' அந்தப் பேச்சு முயற்சி – தீர்வுக்கான சமாதான எத்தனம் – இருக்கும்.

# ஐக்கிய அரபு இராஜ்ஜியத் தூதுவருக்கும் பிரதமருக்கும் இடையில் கலந்துரையாடல்!

### எரிசக்தி ஒத்துழைப்பு தொடர்பாக



இலங்கையின் எரிசக்தித் துறை யில் முதலீடு செய்வதற்கு பெரும் வாய்ப்புகள் இருக்கின்றன என ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் தூதுவர் காலித் நாசர் அல்அமெரி தெரிவித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற கலந்துரையாடலில் இதனை தெரிவித் துள்ள அவர், இருதரப்பு ஒத்துழைப்பு மற்றும் புதிய முதலீடுகள் தொடர்பாக வும் பேசியுள்ளார்.

இலங்கையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களில் முதலீடு செய்வதில் தமது அரசாங் கம் ஆர்வமாக உள்ளதாக ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் தூதுவர் குறிப்பிட்டார்.

எரிசக்தி துறைக்கு மேலதிகமாக விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகள் போன்ற துறைகளில் முதலீடு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் பிரதமர் வலியுறுத்தி னார். அத்துடன், தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளில் இருந்து விரைவாக மீள்வ தற்கு உதவிய ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு அர சாங்கம் சார்பாக பிரதமர் நன்றி தெரிவித் தார்.

# உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 80 வீதம் பாடசாலை வருகை தேவை!

### கல்வி அமைச்சு அதிரடி அறிவிப்பு

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு 80 வீதமான பாடசாலை வருகை தேவை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இந்த கட்டுப்பாடு 2023 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் என கல்வி அமைச்சு நேற்று (திங்கட்கிழமை) அறிவித்துள்ளது.

# பழனி முருகனை தரிசித்த வடக்கு ஆளுநர் ஜீவன்!



இந்தியா சென்றுள்ள வட மகாண ஆளுநர் ஜீவன் தி யாகராஜா பழனி முருகன் ஆலயத்துக்கு சென்று வழி பாடுகளில் கலந்துகொண் டுள் ளார்.

இந்தியாவில் இடம் பெறும் இளம் தொழில் முனைவோர் மாநாடு ஒன் றில் கலந்து கொள்வதற் காக விசேட அழைப்பின் பேரில் ஆளுநர் இந்தியா சென்றார். இந்நிலையில் முருகனின் ஆறுபடை வீடு களில் ஒன்றாகக் கருதப்ப டும் பழனி முருகன் ஆலயத் துக்கு சென்ற ஆளுநர் விசே பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டார்.

# பாவனைகளுக்கு உதவாத புளியை மீள் பொதி செய்த குற்றத்தில் கைதானவருக்கு ஒரு மாதத்தின் பின் பிணை!

மனித பாவனைக்கு உதவாத புளியை மீள் பொதி செய்த குற்றச்சாட்டில் கைதானவருக்கு சுமார் ஒரு மாத காலத்திற்கு பின்னர் யாழ்ப் பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்று பிணை வழங்கியுள்ளது.

யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதக ருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படை யில் யாழ்.நகர் பகுதியை அண்மித்த பகுதி யில் இருந்த களஞ்சிய சாலையை சோதனை யிட்ட போது, மனித பாவனைக்கு உதவாத 6 ஆயிரம் கிலோ நிறையுடைய புளியை மீள் பொதி செய்து கொண்டிருந்த போது அவை மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட புளியையும், அவற் றின் உரிமையாளரையும் கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பா ணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் பொது சுகாதார பரிசோத கர் முற் படுத்தி இருந்தார்.



அதனை அடுத்து, 6 ஆயி ரம் கிலோ புளி யையும் அழிக்க உத்தரவிட்ட மன்று , அதன் உரிமையாளரை விளக்கமறிய லில்தடுத்துவைக்க உத்தரவிட்டார். இந்நிலையில் குறித்த வழக்கு தவணைக் காக நேற்று (திங்கட்கிழமை) எடுத்துக்கொள்ளப் பட்டபோது , புளியின் உரிமையாளருக்கு பிணை வழங்குமாறு, அவரின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி பிணை விண்ணப்பம் செய்தார்.

அதனை அடுத்து அவரை ஒரு லட்ச ரூபா காசு பிணையிலும் , மூன்று சரீர பிணையில், சரீர பிணையாளியில் ஒருவர் யாழ்.நீதிவான் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குள் வசிப்பவ ராக இருக்க வேண்டும். அத்துடன் பிரதி வெள்ளிக்கிழமை காலை 09 மணிக்கும் மாலை 3.30 மணிக்கும் இடையில் நீதிமன் றில் கையொப்பம் இட வேண்டும் எனும் கடுமை யான நிபந்தனைகளுடன் பிணை வழங்கப் பட்டு வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டுள்ளது.

# குழந்தைப் பிறப்பு வீதம் ஜப்பானில் குறைகிறது!




டோக்கியோ, நவ.29

ஜப்பானில் குழந்தைப் பிறப்பு விகிதம் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு வெகுவாகஜ் குறைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகி உள் ளன.

இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து செப்டம்பர் வரை 5,99,636 குழந்தைகள் பிறந்தன எனவும், இது கடந்த ஆண்டை காட்டிலும் 4.9 சதவீதம் குறைவு என்றும் அந்த நாட்டின் சுகாதார அமைச் சகத்தின் புள்ளிவிவரங்கள் தெரிவித்துள்ளன.

பிறப்புகளை ஊக்குவிக்க கர்ப்பம், பிரசவம் மற் றும் குழந்தை பராமரிப்புக்கான மானியங்களை உயர்த்துவது உள்பட பல்வேறு விரிவான நடவடிக்கை களை ஜப்பான் அரசு எடுத்து வருகிறபோதும், பிறப்பு விகிதம் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருவதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் மக்கள்தொகை வீழ்ச்சி ஆகியவை ஜப்பானின் தேசிய வலிமையைச் சிதைக்கும் காரணிகளாக இருப்பதாக கூறி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு கடந்த வாரம் பிரதமர் புமியோ கிஷிடாவிடம் அறிக்கை சமர்ப்பித்தி ருந்தது குறிப்பிடத்தக்கது.



## சோமாலிய ஜனாதிபதி அலுவலகம் அருகே பயங்கரவாதத் தாக்குதல்; நால்வர் மரணம்

மொகாதிசு, நவ.29

கிழக்கு ஆப்பிரிக்க நாடான சோமாலியாவில் மத அடிப்படையிலான அரசை நிறுவ அல்–கொய்தா ஆதரவு பெற்ற அல்–பாப் பயங்கரவாதி கள் முயற்சித்து வருகின்றனர். நாட்டின் பல்வேறு பகுதிகளைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இவர்கள் அரசுக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் பயங்கரவாதத் தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர். இவர்களை ஒடுக்க கடுமையாகப் போராடி வரும் சோமாலியா இராணுவம் போராளி குழுக்களின் உதவியுடன் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளை மீட்டெடுத்து வருகிறது.

இந்த நிலையில், தலைநகர் மொகாடிஷுவில் ஜனாதிபதி அலுவலகம் அருகே உள்ள ஹோட்டல் மீது நேற்றிரவு பயங்கரவாதி கள் திடீர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதையடுத்து, சம்பவ இடத்திற்கு வந்த பாதுகாப்பு படையினர் அவர்களுக்கு எதிர்த் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இருதரப்புக்கும் இடையே கடுமையான துப்பாக்கி சண்டை நடந்ததுடன், இந்தச் சண்டை பல மணி நேரத்துக்கு நீடித்தது. இந்த தாக்குதலில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் அரசு அதிகாரிகள் உட்பட பலர் காயமடைந்துள்ளனர் எனப் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர். இந்தத் தாக்குதலுக்கு அல்–பாப் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவில் பறவைக் காய்ச்சலால் ஐந்தரைக் கோடி பறவைகள் மடிந்தன!

**வரலாற்றில் மிகப் பெரிய விலங்கு சுகாதாரப் பேரிடர்**





நியூயார்க், நவ.29

அமெரிக்காவின் வேளாண் துறை அண்மை யில் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, நடப்பு ஆண்டில் அமெரிக்க வரலாற்றிலேயே இதுவரை இல்லாத வகையில் பறவை காய்ச்சலுக்கு, முதன் முறையாக 5 கோடியே 5 லட்சத்து 40 பறவைகள் உயிரிழந்து உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவற்றில் பண்ணை மற்றும் பண்ணை அல்லாத பறவைகளும் அடங்குகின்றன எனவும், கோழிகள்,

வான்கோழிகள் மற்றும் பிற பறவைகளின் உயிரிழப்பு, இந்த நாள் வரையில் அமெரிக்காவில் மிக மோசம் வாய்ந்த விலங்கு சுகாதாரப் பேரிடராகப் பார்க்கப்படுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு, 2015 ஆம் ஆண்டில் பறவை காய்ச்சலுக்கு 5 கோடியே 5 லட்சம் பறவைகள் உயிரிழந்து இருந்தமை அதிக அளவாக இருந்தது. அதனை இந்த பாதிப்பு எண்ணிக்கை முறியடித்து உள்ளது. இதன்படி, பறவைகளுக்கு பாதிப்பு ஏற்பட்ட பின்பு அவை உயிரிழக்கின்றன. முட்டையிடும் கோழி பண்ணைகளில் ஒரு கோழிக்கு பாதிப்பு உறுதியானால் அதில் உள்ள 10 லட்சம் கோழிகளும் அழிக்கப்படும்.

இதுபோன்ற அழிவுகளால், கோழி முட்டைகள் மற்றும் கோழிகளின் விலை அதிகரித்துள்ளது. நுகர்வோர்களுக்கு பொருளாதார வேதனையையும் ஏற்படுத்தி உள்ளது. இதனால், கடந்த வியாழக்கிழமை அமெரிக்காவில் நடந்த நன்றிதெரிவிக்கும் கொண்டாட்டங்களில் நுகர்வோர் பெரிதும் பாதிப்படைந்தனர்.

அமெரிக்காவில் பறவை காய்ச்சல் கடந்த பிப் ரவரியில் தொடங்கிய பின்னர் 46 மாகாணங்களில் அது பரவி பாதிப்புகளை ஏற்படுத்தியது. வான்கோழி பண்ணைகள் 70 சதவீதத்திற்கும் கூடுதலான அளவுக்கு காய்ச்சல் பாதிப்புகளை எதிர்கொண்டன என அந்த அறிவிக்கை தெரிவித்துள்ளது.

# அமெரிக்காவுக்குப் போட்டியாக சீனா நிலவுக்கு மனிதர்களை அனுப்புகிறது

பீஜிங், நவ.29

பூமி தவிர்த்து வேறு கிரகங்களில் மனிதர்கள் வசிப்பதற்கான சூழலை தேடும் ஆராய்ச்சியில் பல்வேறு நாடுகள் ஈடுபட்டுள்ள நிலையில், நிலவு மற்றும் பூமியின் அருகேயுள்ள செவ்வாய் கிரகத்தில் மனிதர்களின் வாழ்வியலுக்கான சூழலை தேடும் ஆராய்ச்சிகள் பெருகியுள்ளன. இதில் அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா முன்னிலையில் உள்ளது.

50 ஆண்டுகளுக்கு முன்பு மனிதர்களை வெற்றிகரம ாக நிலவுக்கு அனுப்பி சாதனை படைத்த அமெரிக்கா, தற்போது மீண்டும் அந்த முயற்சியில் இறங்கியுள்ளது. ஆர்டிமெஸ் என்கிற திட்டத்தின் கீழ் 2025 ஆம் ஆண்டுக்குள் மனிதர்களை நிலவுக்கு அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது. இதில் முதல் படியாக கடந்த சில நாள்களுக்கு முன்பு ஓரியன் விண்கலத்தை ஆட்கள் இன்றி வெற்றிகரமாக நிலவுக்கு அனுப்பியது.

இந்த நிலையில் அமெரிக்காவுக்கு போட்டியாக நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தை சீனா வெளியிட்டுள்ளது. சீன விண்வெளி நிறுவன இயக்குனரின் உதவியாளரான ஜி குய்மிங் கூறுகையில், விண்வெளி ஆய்வில் சீனாவின் அடிச்சுவடுகள் பூமியின் சுற்றுப்பாதை யில் மட்டும் இருக்காது, நாங்கள் நிச்சயமாக மேலும் பறப்போம். நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தை உருவாக்கி, மனிதர்களை கொண்டு செல்லும் விண்கலத்தின் முக்கிய தொழில்நுட்ப

ஆராய்ச்சி மற்றும் சரிபார்ப்பை சீனா நிறைவு செய்துள்ளது. எனவே நிலவுக்கு மனிதர்களை அனுப்பும் திட்டத்தை செயல்படுத்த நாடு தயாராக உள்ளது. நிலவில் சீனர்கள் கால்பதிக்கும் கனவு விரைவில் நனவாகும் என்று நான் நம்புகிறேன் எனக் கூறியுள்ளார். மேலும், நிலவு குறித்த ஆராய்ச்சியில் சமீபகாலத்தில் சீனா பல மைல்கல் சாதனைகளை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது





# இந்தியாவில் திறக்கப்படுகிறது தனியாரின் ராக்கட் ஏவுதளம்!






ஸ்ரீஹரிகோட்டா,நவ.29

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பி.எஸ்.எல்.வி., ஜி.எஸ்.எல்.வி., எஸ்.எஸ்.எல்.வி. ரக ரொக்கெட்டுகளை தயாரித்து ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் உள்ள இரு ஏவுதளங்களில் இருந்து விண்வெளிக்கு செயற்கைகோள்களை ரொக்கெட்டில் பொருத்தி அனுப்பி வருகிறது. இந்த நிலையில், விண்வெளித்துறையிலும் தனியார் பங்களிப்பை அதிகரிக்க வேண்டும் என்று பிரதமர் நரேந்திரமோடியின் உத்தரவை ஏற்று, இந்தியாவின் முதல் தனியார் ரொக்கெட்டான விக்ரம்-எஸ் ரொக்கெட்டை வெற்றிகரமாக கடந்த 18 ஆம் திகதி இஸ்ரோ விண்ணில் ஏவியிருந்தது.

இந்த நிலையில், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் 6 மாதங்களுக்கு முன்பு சென்னையைச் சேர்ந்த மற்றொரு விண்வெளி தொழில்நுட்ப நிறுவனமான 'அக்னிகுல் காஸ்மோஸ்', ஐ.ஐ.டி.-மெட்ராஸ் மூலம் இந்தியாவின் முதல் தனியார் ஏவுதளத்தை உருவாக்கத் தொடங்கியது. தற்போது இந்தப்பணி நிறைவடைந்த நிலையில், தனியார் ஏவுதளத்தை இஸ்ரோ தலைவர் சோம்நாத் திறந்து வைத்திருந்தார்.

இதுகுறித்து இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறுகையில், ஸ்ரீஹரிகோட்டாவில் ஏவுதளங்கள் உள்ளிட்ட உள்கட்டமைப்புகளை உருவாக்க தனியார் நிறுவனங்களை விண்வெளி நிறுவனம் வரவேற்கிறது. கடந்த 2020 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட விண்வெளி சீர்திருத்தங்களில், ரொக்கெட்டுகளை தயாரிப்பதற்காக மட்டும் அல்லாமல், உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக வும் தனியாரை ஊக்குவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள் ளது. அதனடிப்படையில் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்யப்பட்டதால், தனியார் நிறுவனத்தினர் சுதந்திரமாக செயல்பட முடிகிறது. மேலும் திறக்கப்பட்ட புதிய ஏவுதளத்தில் இருந்து டிசம்பர் மாதம் தனியார் ரொக்கெட் ஏவத் திட்டமிடப்பட்டு உள்ளது என்றும் தெரிவித்தார்.

## குஜராத்தில் ஐந்து ரூபாவுக்கு உணவு; பா.ஜ.கவின் திட்டத்துக்கு வரவேற்பு!




காந்திநகர், நவ.29

குஜராத்தில் கடந்த 1995 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆறு முறையாக பாரதீய ஜனதாக் கட்சி ஆட்சியே நடந்து வருகின்ற நிலையில், தற்போது குஜராத்தில் 7 ஆவது முறையாக ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள பாரதீய.ஜனதா தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களை விட இந்த தேர்தலில் பிரதமர் மோடி அதிக நாள்கள் முகாமிட்டு பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில் பாரதீய.ஜனதா வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில், 20 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். பொது சிவில் சட்டம் அமுல்படுத்தப்படும். 100 இடங்களில் ஐந்து ரூபாவுக்கு உணவு வழங்கப்படும். கல்லூரி மாணவிகளுக்கு இலவச ஸ்கூட்டர், பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதில் 5 ரூபாய்க்கு உணவு வழங்கப்படும் என்ற பாரதீய. ஜனதாவின் அறிவிப்புக்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது.

இதேவேளை, காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில், 10 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்யப்படும். மாதத்துக்கு 300 யூனிட் இலவச மின்சாரம் வழங்கப்படும் என்பதன உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன. ஆம் ஆத்மியின் தேர்தல் அறிக்கையில், டெல்லியில் அமுல்படுத்தப்பட்டுள்ள அனைத்து மானிய திட்டங்களும் குஜராத்திலும் அமுல்படுத்தப்படும். கல்வி, சுகாதார சேவைகள் இலவசமாக வழங்கப்படும். 18 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு மாதம் ரூபா.1000 உதவித் தொகை வழங்கப்படும் என்பன உள்ளிட்ட வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் எதிர்வரும் முதலாம் திகதி (நாளை மறுதினம்) முதல் கட்ட வாக்குப் பதிவுகள் நடைபெறும் நிலையில் குஜராத் தேர்தல் களத்தில் விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உத்தர பிரதேசத்தில் ஆயிரம் ஜோடிகளுக்கு முதலமைச்சர் யோகி தலைமையில் திருமணம்



கோரக்பூர், நவ.29

உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூரில் மாநில அரசு சார்பில் ஆயிரம் ஜோடிகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கலந்து கொண்டு, ஆயிரம் ஜோடிகளுக்கும் திருமணம் செய்து வைத்து ஆசி வழங்கியமையுடன், ஜோடிகளுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கி, அவர்களுடன் உரையாடினார்.

பின்னர், யோகி ஆதித்யநாத் உரையாற்றுகையில்-

பொருளாதாரத்தில் நலிந்த இளம்பெண்கள், கௌரவமாக திருமணம் செய்து கொள்வதற்காக, 2017 ஆம் ஆண்டு இத்திட்டம் கொண்டுவரப்பட்டது. முதலில், ஒவ்வொரு ஜோடிக்கும் ரூபா.31 ஆயிரம் அளிக்கப்பட்டது. தற்போது, ரூபா.50 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதுவரை 2 லட்சம் ஜோடிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இன்று விவாக பஞ்சமி. இந்த மங்கல நாளில் தான் ராமர்-சீதை திருமணம் நடந்தது.?இத்தகைய புனித நாளில், ஆயிரம் ஜோடி திருமணத்தைப் பார்த்தமை நமது அதிர்ஷ்டம். சமூகத்தில் நிலவும் கொடிய பழக்கங்களான குழந்தைத் திருமணம், வரதட்சணை ஆகியவற்றை ஒழிக்க நீங்கள் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினருக்கும் பலன்களை அளிக்க இரட்டை என்ஜின் அரசு உறுதி பூண்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

## நீலகிரியில் கடுமையான குளிரால் பயணிகள், பொதுமக்கள் பாதிப்பு



ஊட்டி,நவ.29

நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, கோத்தகிரி, குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த இரு நாள்களாகக் கனமழை பெய்து வருகின்றது. இதற்கிடையே காலை, மாலை நேரங்களில் பனிப்பொழிவும் அதிகமாக உள்ளது. மழையுடன், பனிப்பொழிவும் காணப்படுவதால் நீலகிரி மாவட்டத்தில் தற்போது கடும் குளிர் நிலவுகிறது.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது. கடும் குளிரால் பள்ளி செல்லும் குழந்தைகள் நடுங்கியபடி பள்ளிக்குச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும், முதியவர்கள் மற்றும் பெண்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடக்கும் சூழல் உருவாகி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம் ஊட்டிக்கு சுற்றுலா வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்ந்தும் வந்து கொண்டு இருக்கிறார்கள் என்றும், ஊட்டி – மேட்டுபாளையம் வரை சாலையில் கடும்?பனிமூட்டம் சூழ்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. பனி மூட்டத்தால் எதிரே வரும் வாகனங்கள் தெரியாதமையால் வாகன ஓட்டிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். காலை 8 மணிக்கு பிறகும் வாகனத்தின் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி மெதுவான வேகத்தில் வாகனங்களை இயக்கிச்

செல்கிறார்கள் என்று கூறப்படுவதுடன், இன்று காலையும் வெகு நேரமாகியும் வெயில் தென்படாத நிலையில், குளிர் அதிகமாக காணப்பட்டதாகவும், இந்தக் காலநிலை மாற்றத்தால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# உயிர்க்காப்புப் பயிற்சிப் பாட நெறியை பூர்த்தி செய்த 33 பேருக்கு சான்றிதழ்

## திருகோணமலையில் வழங்கிவைப்பு







(ஹஸ்பர)

திருகோணமலையில் உயிர்க்காப்புப் பயிற்சிப் பாடநெறியைப் பூர்த்தி செய்த 33 பேருக்கான சான்றிதழ் மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம தலைமையில் நடைபெற்றது.

"உயிர்க்காப்பு நடவடிக்கை பொறுப்புவாய்ந்த தொழிலாக காணப்படுகின்றது. இத்துறையில் பயிற்சிகள் பெற்றவர்களுக்கு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் சிறந்த தொழிலை பெற்றுக்கொள்ள முடியும். இத்தொழிலின் கௌரவம் பேணும் வகையில் செயற்பட வேண்டும். நாட்டுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் செயற்படக்கூடாது. இலவசமாக கிடைக்கப் பெற்ற இப்பயிற்சி ஊடே மாவட்ட மக்களின் பாதுகாப்புக்கு ஏற்றால்போல் பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்" –என இதன்போது அரசாங்க அதிபர் வேண்டிக கொண்டார்.

இப்பாடநெறிக்கு நேர்முகத்தெரிவு மூலம் பயிலுநர்கள் தெரிவு செய்யப்பட்டமையுடன் திருகோணமலை மெக்கேசர் நீச்சல் தடாகத்தில் பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர், இலங்கை உயிர்காப்பு சங்க செயலாளர் சமீர ஜீவன்த உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## சுவாமி நடராஜானந்தா மகராஜின் ஜனன தின நிகழ்வு காரைதீவில்!





(வி.ரி. சகாதேவராஜா)

சேவையின் சின்னம் சுவாமி நடராஜானந்தா மகராஜின் 119 ஆவது ஜனன தின நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை அவர் பிறந்த காரைதீவு மண்ணில் நடைபெற்றது .

காரை இந்து சமய விருத்தி சங்க தலைவர் செ.மணிமாறன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்டம் மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக காரைதீவுப்பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து கொண்டார்.

சுவாமி நடராஜானந்தா நூற்றாண்டு விழாச் சபையின் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட ஆன்மீக பிரமுகர்கள், அதிபர்கள் சுவாமியின் உறவினர்கள், பாடசாலை மாணவர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக சுவாமியின் உறவினரான ஓய்வு நிலை ஆசிரியர் த. அருணாசலம் நந்திக் கொடி ஏற்றி வைத்தார். தொடர்ந்து அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து உரைகளிடம்பெற்றன.

மன்ற செயலாளர் கு.ஜெயராஜி பஞ்சராத்தி காட்டி பூஜை இடம்பெற்றது.

## சேனையூர் கணனி வளநிலையம்





(ஹஸ்பர்)

வன்னி ஹோப் மற்றும் ரட்ணம் பவுன்டேன் நிறுவன அனுசரணையில் மூதூா சேனையூர் கிராமத்தில் அனாமிகா பண்பாட்டு மைய வளாகத்தில் கணனி வளநிலையம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு கடந்த சனியன்று அனாமிக்கா பண்பாட்டு மையத்தின் ஒருங்கிணைப்பாளர் ரட்ணசிங்கம் தலமையைல் இடம்பெற்றது.

டிஜிட்டல் கல்வியை கிராமங்களில் மேம்படுத்தும் நோக்குடன் ஆஸ்ரேலியாவில் இயங்கி வரும் வன்னி ஹோப் மற்றும் ஐக்கிய இராஜியத்தில் இயங்கிவரும் ரட்ணம் பவுன்டேன் நிறுவனங்களின் நிதிப்பங்களிப்புடன் மேற்படி கணினி வள நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இந்தக் கணனி வளநிலையத்தின் மூலம் சம்பூர், சேனையூர் போன்ற கிராமங்களில் உள்ள பாடசாலை மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் போன்றவர்கள் கணனி அறிவினைப் பெற்று நன்மையடையவுள்ளனர்.

இந்த நிகழ்வில் ஆஸ்ரேலியாவில் இருந்து வருகை தந்திருந்த வன்னி ஹோப் நிறுவனத்தின் செயலாளர் டாக்டர் மாலதி வரண், வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளரும் மக்கள் சேரைவ மன்றத்தின் தலைவருமான எம்.ரீ. எம்.பாரிஸ், அனாமிக்க பண்பாட்டு மையத்தின் இயக்குநர் திருமதி பாலசுகுமாா மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஹக்கீம் தலைமையில் ஓட்டமாவடியில் ஞாயிறன்று விழிப்புணர்வுக் கருத்தரங்கு





(கே.எ.ஹமீட்)

எதிர் வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான முன்னெடுப்பாக எல்லை நிர்ணயம் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், நாடாளு மன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ஓட்டமாவடி அபூ மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம் மற்றும் எம். எஸ். தௌபீக், முன்னாள் அமைச்சர் உதுமா லெப்பை, கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# மகாஜன வீராங்கனைகளுக்கு நேற்று மகத்தான வரவேற்பு!










தேசிய ரீதியில் சாதனை படைத்த வலி. வடக்கு மாகாஜனக் கல்லூரி வீராங்கனைகளுக்கு வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) தெல்லிப்பழை பிரதேசத்துக்கு பெருமை தேடித் தந்த, வீராங்கனைகளுக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுப் பெண்கள் உதைபந்தாட்டப் போட்டியில் 20 வயதுக்கு உட்பட்ட மற்றும் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி தேசிய மட்டத்தில் வெற்றி வாகை சூடி சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் சிவஶ்ரீ, உதவி பிரதேச செயலாளர் க.சரோஜினி, கல்லூரி அதிபர்கள், கல்விச்சமூகத்தினர், பழையமாணவர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## லொறிச் சாரதியிடம் 12,000 ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் 4 பொலிஸார் பணி இடைநிறுத்தம்!

லொறிச் சாரதி ஒருவரிடம் 12 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கந்தகெட்டிய பொலிஸ் நிலையத்தில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் மூன்று கான்ஸ்டபிள்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 20 ஆம் திகதி கந்தகெட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவந்தன பிரதேசத்தில் லொறி ஒன்றை நிறுத்தி அதன் குறைபாடுகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக 12 ஆயிரம் ரூபாவை இவர்கள் இலஞ்சமாகப் பெற்றுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், பதுளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி. எம். ஜயரத்ன இவர்களை பணியிலிருந்து இடைநிறுத்தியுள்ளார்.

## மலையக அரசியல் அரங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு சிறப்பு உரையரங்கம் ஹற்றனில் நடந்தது!

மலையக அரசியல் அரங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு சிறப்பு உரையராங்கம் ஹற்றனில் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹற்றன் – டிக்கோயா நகர சபை மண்டபத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், மலையக அரசியல் அரங்கத் தின் முதன்மை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் தொழிற்சங்க துறவி அமரர் வி.கே வெள்ளையன் அவர்களின் உருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி சஞ்சுளா பீட்டர்ஸ், ஹற்றன் – டிக்கோயா நகரசபை உறுப்பினர் எஸ்.கேசவமூர்த்தி உட்பட இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## பேஸ்புக் ஊடான களியாட்ட நிகழ்வில் வெலிகம கடற்கரையில் போதைப்பொருள்!

### எண்மர் கைது

பேஸ்புக் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டு வெலிகம கடற்கரையில் இடம்பெற்ற விருந்துபசார நிகழ்வொன்றை பொலிஸார் சுற்றிவளைத்து போதைப்பொருள் மற்றும் மாத்திரைகளை வைத்திருந்த 8 பேரை சந்கேத்தில் கைது செய்துள்ளனர்.

வெலிகம பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஞாயிற்றுக் கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட வெலிகம, ரணல, திஸ்ஸமஹாராமய, தெலிஜ்ஜவில பெலியஅத்த உட்பட பல பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர். ஞாயிற்றுக்கிழமை இவர்களை மாத்தறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## ஜனநாயகத்தை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மற்றும் பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு செய்திருக்கின்றார் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம்.

இது தொடர்பில் 'வடக்கு மாகாண ஆளுநரின் அரசியலமைப்பு மீறல்' என்ற தலைப்பில் அவர் மேற்படி இருவருக்கும் முகவரியிட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

வடக்கு மாகாண ஆளுநர் வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டங்கள் எனக்கூறப்படும் பின்வரும் அறிவித்தல்களை 2303/29 இலக்கம் கொண்ட 27.10.2022 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தகமானியில் பிரசுரித்துள்ளார் என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

1) 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் நியதிச் சட்டம்.

2) 2022 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கசுற்றுலாப்பயணிகள்நியதிச்சட்டம்.

இந்த ஆவணங்களில் தாம் அரசியலமைப்பின் உறுப்புரிமை 254 ஙீ இன் கீழான ஏற்பாடுகளின் படியும் உறுப்புரிமை 254 வீ இன் கீழ் 24.03.1990 ஆம் திகதி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தின் கீழான ஏற்பாடுகளின் படியும் செயற்படுத்துவதாகக் கூறியுள்ளார். இந்த ஆவணங்களின் அமைப்பு முறை மற்றும் சொற்பிரயோகங்களின் மீது விமர்சிப்பதை நான் தவிர்க்க விரும்புகின்றேன்.

எனினும், ஆளுநரின் நிறைவேற்று அதிகாரம் தொடர்பாக குறிப்பிடும் அரசமைப்பின் 254 ஙீ உறுப்புரிமையின் கீழ் சட்டவாக்க அதிகாரத்தை தாம் பிரயோகிப்பதாக கூறுவது மிகவும் குழப்பகரமாகக் காணப்படுகின்றது.

உண்மையில் இந்த உறுப்புரிமை மாகாண சபைகளின் நியதிச் சட்டவாக்க அதிகாரம் பற்றியும் குறிப்பிடுகின்றது. நிறைவேற்று அதிகாரம் மற்றும் நியதிச் சட்ட உருவாக்கம் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு மிகவும் வெளிப்படையானது. எனவே இந்த உறுப்புரிமையின் கீழ் இவர் நியதிச் சட்டங்களை இயற்ற முடியாது.

நிலைமாறு கால ஒழுங்குகள் பற்றிய அரசியலமைப்பின் உறுப்புரிமை 254 வீ இன் கீழான ஜனாதிபதியின் பிரகடனத்தை இவர் கவசமாக முன் வைக்கின்றார். இவையும் நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரத்தை ஆளுநருக்கு வழங்கவில்லை.

இதுபோன்ற சட்டவாக்கம் அல்லது சட்டம் இயற்றல் அதிகாரம் உலகில் வேறு எங்கிலும் தனிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்டோ பிரயோகிக்கப்படவோ இல்லை.

மற்றவர்களுக்குத் தெரியாமல் இரகசியமான முறையில் ஆளுநர் மேற்கொண்ட இந்த நடவடிக்கை ஜனநாயகத்தினதும் ஜனநாயக ஆட்சி முறையினதும் ஜனநாயகக் கட்டமைப்புகளினதும் மக்களின் ஜனநாயக உரிமைகளினதும் அடிப்படை அத்திவாரத்தையே தகர்ப்பனவாகும். ஆளுநரின் தற்றுணிவு அதிகாரம் அரசமைப்பின் உறுப்புரிமை 254 ய் (2) படி ஜனாதிபதியின் பணிப்பின் கீழானதாக வேண்டும் என்பதும் ஆளுநரின் நிறைவேற்று அதிகாரம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் 15 (2)ஆம் பிரிவின்படி ஜனாதிபதியின் பெயரில் எனக் கூறப்பட வேண்டும் என்பதும் இங்கே குறிப்பிடப்பட வேண்டியது மிகப் பொருத்தமானதாகும்.

எனவே வடக்கு மாகாண ஆளுநர் இந்த விடயத்தில் திட்டமிட்டே இந்த நாட்டின் அரசியலமைப்பை மீறியுள்ளார் என்பது தெளிவுஎன்பதால் இதற்கெதிராக பொருத்தமான, காத்திரமான நடவடிக்கை வேண்டப்படுகின்றது. – என்று உள்ளது.

## யாழ்.பல்கலை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர் என்றும் அறிவித்தன.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று இரண்டு வெவ்வேறு மேல் நீதிமன்றங்களில் முன்னிலையாகி மேற்கொண்ட சமர்ப்பணத்தின் அடிப்படையில் இரு குற்ற பத்திரங்களையும் விலக்கிக் கொள்ள சட்டமா அதிபர் தரப்பு இணங்கியது. இதை அடுத்து வழக்குகள் முடிவுறுத்தப்பட்டு, குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் திவாகரனுக்கு எதிரான வழக்கு நீதிபதி சமித் தொட்டேவத்த முன்னிலையிலும் –

செயலாளர் பபில்ராஜுக்கு எதிரான வழக்கு நீதிபதி நவரத்தின மாரசிங்க முன்னிலையிலும் –

இன்று வெவ்வேறு சமயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர் வழக்குகள் விலக்கிக் கொள்ளப்பட்டன

மேற்படி இருவருடன் பல்கலைக மருத்துவ பீடத்தின் சிற்றுண்டிச் சாலை நடத்துனரும் இந்த விவகாரத்தை ஒட்டிக் கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

எனினும் அப்போதைய சட்டமா அதிபருடன் இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் நேரில் முன்னிலையாகி தெரிவித்த சமர்ப்பணங்களை அடுத்து, இரண்டு வார விளக்கமறியலின் பின்னர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்களுக்கு விசேட பிணை அனுமதி அளிப்பதற்கான இணக்கத்தை சட்டமா அதிபர் வழங்கியிருந்தார்.

எனினும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு எதிராகக் கொழும்பில் வெவ்வேறு மேல் நீதிமன்றங்களில் தனித்தனியாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடுக்கப்பட்டன.

வழக்குத் தவணைகளுக்காக இருவரும் கொழும்பு மேல் நீதிமன்றங்களில் தொடர்ந்து இழுபட்டு வந்தனர்.

அவர்களின் சட்டத்தரணி சுமந்திரன் இவ்விடயங்களை ஒட்டி சட்டமா அதிபருக்கு நீண்ட சமர்ப்பணங்களை மேற்கொண்டு இருந்தார்.

மேற்படி இருவரும் தமது கல்வியை முடித்து இப்போது உத்தியோகம் பார்க்கும் நிலையில் அவர்கள் தொடர்பில் அவர்களது சட்டத்தரணி மேற்கொண்ட நியாயமான வாதங்களைக் கவனத்தில் எடுத்து அவர்களுக்கு எதிரான குற்றப் பத்திரங்களை விலக்க இணங்குவதாக சட்டமா அதிபர் தரப்பில் இரண்டு நீதிமன்றங்களிலும் இன்று தெரிவிக்கப்பட்டது.

அதை அடுத்து வழக்குகளை முடிவுறுத்தி இருவரையும் விடுவிக்கும் உத்தரவுகளை அவரவர்கள் தொடர்பான வழக்குகளின் நீதிபதிகள் இன்று வழங்கினர்.

இருவர் சார்பிலும் சட்டத்தரணிகள் கேசவன் சயந்தன், நிரான் அங்கிட்டல், திவ்யா மஸ்கரங்கே ஆகியோரின் அனுசரணையோடு ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் ஆஜராகி இருந்தார்.

## தமிழரை அடக்கி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மே மாதத்தில் முடிவுடைந்த பின்னரும் சிங்கள பௌத்த பேரினவாத வக்கிர அடிப்படைவாதம் குறையவில்லை. அதற்காகப் பல உண்மைகளைக் கூறலாம். அவற்றில் ஒன்றாத இருப்பது மட்டக்களப்பு மண்முனை மேற்குப் பிரதேச செயலகப் பிரிவில் தாண்டியடியில் அமைந்துள்ள மறைந்த தமிழ் உறவுகளானமாமறவர்களின்துயிலும் இல்லமாகும். இங்கு மரணித்த உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைகள் அமைந்துள்ள துயிலும் இல்லத்தின் மேலாக அதிரடிப் படையினர் முகாம் அமைத்துள்ளனர்.

கடந்த 13 ஆண்டுகளாக இந்த முகாம் செயற்பட்டு வருகின்றது. அதிரடிப் படைகளின் சப்பாத்துக்கால்களில் கீழ் சமாதிகள் மிதிபட்டுக் கொண்டிருக்கின்றன. மண்முனை மேற்குப் பிரதேச செயலகப்பிரிவில் பொலிஸ் நிலையம் ஒன்று இயங்கி வருகின்றது. அது இருக்கத்தக்கதாக, யுத்தம் இல்லாத காலத்தில் இந்த அதிரப் படை முகாம் எதற்கு என்ற கேள்வி எழுகின்றது.

தமிழர்கள் உயிரோடு இருக்கும் போதும் அவமதிக்கப்படுகின்றார்கள். அவர்கள் மரணித்த பின்னரும் அவமதிக்கப்படுகின்றார்கள் என்பதற்குத் தாண்டியடி அதிரடிப்படை முகாம் உதாரணமாக அமைந்துள்ளது.

இந்த முகாமை உடனடியாக அகற்ற வேண்டும் என்று கடந்த ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்றத்தில் வலியுறுத்திக் கூறியிருந்தோம். அக்காலத்தில் வடக்கு, கிழக்கில் இருந்து பல முகாம்கள் அகற்றப்பட்டாலும், இந்த மரணித்த தமிழ் மறவர்கள் அடங்கிய மண்ணில் அமைக்கப்பட்ட முகாம் அகற்றப்படவில்லை. இது தமிழர்களுக்குரிய அடிப்படை உரிமைகளை உயிருள்ள போது மட்டுமல்ல, உயிரற்ற காலத்திலும் மறுக்கின்ற வக்கிர செயலாகவே அமைந்துள்ளது.

மறைந்த தமிழ் உறவுகளை நினைவில் ஏந்தும் காலத்தில் முகாமுக்கு அண்மையில் நினைவேந்தல் செய்வதற்கும் கூட பொலிஸார், அதிரடிப் படையினர் மிரட்டல்கள், எதிர்ப்புகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

கடந்த 2018 இல் முகாமுக்கு அண்மையில் நினைவேந்தலைச் செய்தோம். ஆனால், பொலிஸாரின் அழுத்தங்களும் கணப்பட்டன. பின்னர் சஹ்ரானின் ஆட்களால் இரு பொலிஸார் வவுணதீவில் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதையடுத்து நினைவேந் தலில் கலந்துகொண்ட முன்னாள் போராளிகள் மீது அந்தக் குற்றம் சுமத் தப்பட்டு அடைக்கப்பட்டனர், வதைக்கவும் பட்டனர்.

சஹ்ரானின் குண்டுவெடிப்பின் பின்னரே உண்மையான குற்றவாளிகள் கண்டறியப்பட்ட பின்னர், முன்னாள்போராளிகள் விடுவிக்கப்பட்டனர்.

நல்லிணக்கம் பற்றியும், ஒரு தாய்மக்களாக வாழ்தல் பற்றியும் வார்த்தைகளை வெளியிடும் ஜனதிபதி ரணில் விக்கிரமசிங்க, இப்படியான தமிழர்களை அவமானப்படுத்தும் செயல்களுக்கு என்ன செய்யப் போகின்றார்?

முடியாட்சிக் காலத்தில் தமிழ் மன்னர் எல்லாளனின் சமாதிக்கு மக்கள் மரியாதை அளிக்கவேண்டும் என்று சிங்கள மன்னன் துட்டகைமுனு கூறியதாக வரலாறு கூறுகின்றது. ஆனால், மக்களாட்சிக் காலத்தில் என்ன நடக்கின்றது?

அடக்குமுறை அழிப்பு முறை, ஒடுக்குமுறைகளால் இந்த நாட்டில் எதையும் சாதிக்க முடியாது என்பதே 74 ஆண்டுகால வரலாறாகும்.

தமிழர்களைப் புண்படுத்திக் கொண்டு அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு எதையும் காண முடியாது. இதனை ஆட்சியாளர்கள் இன்னும் உணரவில்லை என்றால், நாட்டுக்கு விமோசனம் கிடையாது – என்றுள்ளது.

## இலங்கை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைத்துச் சென்றுள்ளனர்.

அந்தாமான் கடலில் இரண்டு மாதங்களாகத் தத்தளித்த இலங்கை மீனவர்களையே இந்தியக் கடலோரக் காவல்படை மீட்டுள்ளது.

இலங்கையின் மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேசங்களில் இருந்து மீன்பிடிப்பதற்காகப் படகு ஒன்றில் கடந்த ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் சென்ற 4 மீனவர்கள் காணாமல்போயிருந்தனர். இயந்திரக் கோளாறு காரணமாக 54 நாட்கள் கடலில் தத்தளித்த நால்வரையும் நேற்றிரவு இந்தியக் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்கு உணவு வழங்கி மருத்துவம் அளித்த கடற்படையினர், அவர்களைச் சென்னை துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.11.2022 இல் வெளியிடப்பெற்றது.